திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஆரம் பாக்கம் ஆந்திரத்தின் எல்லையைக் கடந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருப்பதனுல் ஆந்திர எல்லையைத் தாண்டிப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஆரம்பாக்கத்தி லிருந்து திருவள்ளூர்,—பொன்னேரிக்கு பஸ்கள் விட அரசு விரைவு படுத்துமா ?

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : விரைவுபடுத்தப்படும்.

Appointments in temples.

* 368 *Q.*—THIRU A. PARANDHAMAN, PULAVAR C. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government have issued specific instructions to the Devasthanam Authorities in Tamil Nadu to the effect that persons belonging to Backward Classes and Scheduled Castes must be considered for appointment and that the percentage fixed by the Government in that regard must be followed ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பின்தங்கிய வகுப்பினர்கள் ஆலயங்களில் ஏற்கெனவே ஊழியம் செய்து வருகிருர்கள். ஆகவே, அவர்கள் நியமனத்திற்குப் பிரத்தியேகமாக அறிவுரை ஏதும் தேவை யில்லை. ஆலயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை ஊழியர்களாக நியமிப்பதைக் கட்டாயப்படுத்த இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்ட விதிகளை திருத்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி ஆலயத்தை எடுத்துக் கொண்டால், பணியாளர்களை நியமிப்பதில் இந்த 18 சதவிகிதம் தாழ்தப்பட்டவர் களுக்கு என்கிற விகிதாசாரம் பின்பற்றப்படவில்லை. இதுவரை, ஏறத்தாழ 90 வழிகாட்டிகளை நியமித்துள்ளார்கள். இந்த 90 பேர்களில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்டவர் கிடையாது. நான் அறங்காவலராக இருந்து சொல்லியும் கேட்கவில்லை. ஆகவே, எல்லாக் கோவில்களிலும் 18 சத விகிதம் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று ஆணையாளர் அவர்களால் அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. அந்த அறி வுரை பல இடங்களில் பின்பற்றப்படவில்லை என்கிற காரணத்தினுல் சட்டம் திருத்தம் செய்யலாமா என்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர் களாக நியமிக்கப்படுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஆலயப் பணியாளர்களைப் பற்றியது. அர்ச்சகர்களைப் பற்றியது அல்ல.

1974 மார்ச் 11]

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போதே பல பிடாரி அம்மன் கோயில்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஊழியர்கள் நியமனத்தைப் பற்றியது.

* 369 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக கோயில்களில் இதுவரை எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நாற்பத்திரெண்டு அரிசன அர்ச்சகர்கள் பணிபுரிகின்றனர். ஆனால், அவர்கள் யாரும் நியமனம் செய்யப் படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலேதான் அர்ச்சகர்களாகத் தாழ்த்தப்பட்டவர்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கீகரிக்கப்படும் இவர்களை சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குத் தொடரப்பட்ட காரணத்தினால் அர்ச்சகர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதில் ஏதாவது சங்கடங்கள் இந்த அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பரம்பரை அர்ச்சகர் முறை இருந்து வருவதை நீக்கவும், அதற்கு மாறாக தேவையான கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் அடங்கிய சமய அமைப்பை ஏற்படுத்த அரசு விரும்பியது. அதனால்தான் எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் கோயில் பூசாரிகளாக, அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்று சட்டத்திலே செய்தோம். ஆனால், தமிழ் நாட்டைச் சேர்ந்த சில மடாதிபதிகள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்ததால் அது ஆராயப்பெற்று பரம்பரை அர்ச்சகர் முறை ஒழிக்கப்பட்டிருக்கிறதே தவறு, என்று சொல்லி எந்த சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகராக நியமிக்கலாம் என்ற முறையைச் செல்லுபடியாக்காமல் செய்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசை, இந்திய அரசியல் சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 26 ஆகிய இரண்டையும் திருத்தி, அதைச் செல்லுபடியாகும் சட்டமாக மாற்ற வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்து அது சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் இந்திய அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமென்று பலமுறை கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் மத்திய சர்க்கார் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எது